● இளைஞர்கள் கைது, சிலர் காணாமல் போயுள்ளனர்

காரைநகரில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன

காரைநகரிக் இறந்தோர் மற்றும் காணாமல்போனோர் விபரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் உறவினர்களுக்கு கிடைத்துள்ளன. காரைநகர் சமுர்பாவினைச் சேர்ந்த தம்பிமுத்து என்பவர் மரணமாகியுள்ளதாக அவரது மகனுக்கு உறவினர்களின் கடிதம் வந்துள்ளது. காரைநகர் ஊரிபரணவூர் என்ற இடத்தில் பாரிசவாத நோயினால் படுக்கையில் உள்ள திருமதி சோமசுந்தரம் சரசுவதி (60) சுகமாக இருப்பதாகவும் உறவினர்கள் பராமரிப்பதாகவும் இவரது மகளுக்கு கடிதம் கிடைத்துள்ளது. இவரை இங்கு கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. காரைநகர் அபிவிருத்திச் சபை உப அலுவலக மின்சாரப்பகுதி ஊழியராக நல்லையா தெய்வரதாதன் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படவில்லை திருமதி இராசையா —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 : 50

முரசொலி

முரசு 18 ஒலி 193 பிரசோற்பத்தி வைகாசி 26 (09-06-1991) ஞாயிறு

மன்னாரில் வெளியேறிய படை

புலிகள் தாக்கியதில் பின்வாங்கியது

அகத்திமுறிப்பில் மோதல் தொடர்கிறது

மன்னார் மாவட்டத்தில் பல முகாம்களில் இருந்து வெளியேறிய படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் முகாம்களுக்குப் பின்வாங்கினர்.

நானாட்டான் பகுதி முகாமில் இருந்து வந்த படையினரை ஆண்டான் வெளியில் வழிமறித்து புலிகள் தாக்குதலை நடாத்தியதையறிந்து படையினர் நானாட்டானுக்கு பின்வாங்கிச் சென்றனர்.

இதே சமயம் மாந்தையில் உள்ள படையினர் அடம்பன் நோக்கி வந்தனர். இவர்கள் மீதும் புலிகள் தாக்குதலை நடாத்தியதில் படையினர் பின்வாங்கி மாந்தை சென்றனர்.

சிலாவத்துறையில் இருந்து முருங்கன் நோக்கி வந்த படையினரை அகத்திமுறிப்புச் சந்தியில் விடுதலைப் புலிகள் நடுத்த நிரந்தர தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

கஜபாபுர முகாம் மீது தாக்கு
ஆறு படையினருக்குக் காயம்

திருகோணமலை கஜபாபுர இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதலினால் ஆறு —04 ஆம் பக்கம் பார்க்க

ஆனையிறவு முகாம் பகுதியில் ஷெல் தாக்கு; குண்டுவீச்சு

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முன்தினமிரவு இயக்கச்சி நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்றுக்காலை இப்பகுதியில் முன்று குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தின.

புல்லுமலையில் இரு பெண்கள் படையினரால் கைது

மட்டக்களப்பு பெரிய புல்லுமலை முகாம் படையினர் புல்லுமலை கொலனியில் இரு —04 ஆம் பக்கம் பார்க்க

மணலாறு முகாம் காவலரண் முன்றுநிமிடத் தாக்குதலில் அழிப்பு

மணலாறு மாவட்டத்தில் உள்ளமுத்தரிகைக்குளம் இராணுவ முகாமுக்கும், கிளோல் நிட்சேவிட்டரில் இராணுவ முகாமுக்கும் இடையில் அமைந்திருந்த காவலரண் ஒன்று விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 12 15 மணியளவில் இக்காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதனால் அதனுள் இருந்த படையினர் காயங்களுடன் அங்கிருந்த முகாம்களுக்கு தப்பிச் சென்றனர்.

முன்று நிமிடத்தாக்குதலை —04 ஆம் பக்கம் பார்க்க

விட்டுப் பணியாளர்களை பதிவு செய்யக் கோரிக்கை

கொழும்பிலுள்ள வீடுகளில் பணிபுரியும் பணியாளர்களின் விபரங்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யுமாறு வீட்டு உரிமையாளர்களை கேட்கப்பட்டுள்ளனர்.

அதிகரித்தவரும் கொலை, கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களை கட்டுப் —04 ஆம் பக்கம் பார்க்க

தமிழீழத் தேசிய விருதுகள்

தமிழீழ மண்ணினதும் மக்களினதும் மேன்மைக்காக உழைக்கும் மக்களிலிருந்து அவர்கள் ஆற்றிவரும் இலக்கியப்பணி, கலைப்பணி, மக்கள் நற்பணி, போராளிப், பங்களிப்பு, புதிய கண்டுபிடிப்புக்கள், தீரச்செயல்கள், அரசியற்பணி, மருத்துவம், விஞ்ஞானம், கல்வி, பத்திரிகைத் துறை போன்ற பல்வேறு துறைகள் சார்பில் ஒவ்வோரு ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்த அவர்களை கௌரவிப்பதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

இராணுவ நடவடிக்கைக்கு அமைச்சர் ரணில் விளக்கம்!

விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்யவே அவர்களுக்கு எதிராக தற்போது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இவ்வாறு தொழிலமைச்சரும் சபை முதல்வருமான —04 ஆம் பக்கம் பார்க்க

முத்தமிழ் விழாவில் மன்னார் சுரேஷ்

மக்களை இங்கு பார்க்கும் போது போராட்டத்தில் உற்சாகம் ஏற்படுகிறது

இன்று இங்கு நடக்கும் முத்தமிழ் விழா தானை மன்னார், அம்பாறை எல்லைப் பகுதியில் நடைபெறவேண்டும். போராட்டம் எல்லையைக் காப்பதோடு அகிலாத எமது பண்பாடுகளையும் காக்க வேண்டும்.

இவ்வாறு முத்தமிழ் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மன்னார் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சுரேஷ் தெரிவித்தார்.

"விழாவுக்கான அழைப்பு மன்னார் தமிழர்க்கும் எனக்கும் கிடைத்த போதிலுக்கு அங்கு இப்போது போர் நடை —04 ஆம் பக்கம் பார்க்க

எழுச்சிப்பாடலை கேட்க பெருமளவில் மக்கள் திரண்டனர்

தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடிய ஈழத்தும் பாடகர்கள் நேற்று மாலைப்பொழுதில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் மேடையில் மக்கள் முன்தோன்றினர்.

இவர்களை நேரில் பார்ப்பதற்காக லட்சக்கணக்கான மக்கள் மாலைப்பொழுதில் மாவீரர் —04 ஆம் பக்கம் பார்க்க

ஒளிநொச்சி

நெல் சந்தைப்படுத்தும் சபை வவுனியாவில் இயங்குகிறது

ஒளிநொச்சியில் இயங்கி வந்த நெற்சந்தைப்படுத்தும் சபையின் பிராந்திய அலுவலகம் வவுனியா நகரில் உள்ள கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் தற்போது இயங்கி வருகிறது. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவும் ஆரம்பிக்கப்படும் —4 ஆம் பக்கம் பார்க்க

வீர சுதந்திரப் போருக்கு வீறு சேர்க்கும்

முத்தமிழ் விழா

இன்றும் நாளையும் சாவகச்சேரியில்

அலைகடலென அனைவரும் திரள்வோம்!

தமிழீழத் தேசியவிருது பெறும் மாமனிதர்களின் விவரம்

மறைந்த
க. சிவானந்தசுந்தரம்:
மக்கள் பணி

யாழ் மாவட்டம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த சிவானந்தசுந்தரம் அவர்கள் தமிழீழ விடுதலைக்காக தன் வாழ்நாளில் இறுதிவரை அஞ்சாத அரிமாவாகச் செயற்பட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவர்.

1956 இல் சிங்கள ஆட்சியாளரின் மொழித்திணிப்பையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து தமிழ் அரச பணியாளர்களுடன் சேர்ந்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கி அதன் முதல் தலைவராகச் செயற்பட்ட சிவானந்தசுந்தரம் அவர்கள் தமிழ்ச் சமூகத்திற்காக ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியன.

1961 இல் தமிழ்மக்கள் எழுச்சி பெற்று சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக நடத்திய அறப்போரின்போது தமிழரசுக்கட்சியின் பொறுப்புச் (நிர்வாகச்) செயலாளராக இருந்து அப்போராட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு பெரும் பணியாற்றியவர்.

பின்னர் தமிழரசுக்கட்சியுடனான கருத்து வேறுபாடுகளினால் அதிலிருந்து ஒதுங்கி சிவானந்தசுந்தரம் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீறுடன் நடத்திய வேளையில் அரசியல் நடத்திவோர் மக்களுக்கு மூலம் கொடுக்க முடியாத ஒடி ஒளிந்தவேளையில் தமிழீழ மக்கள் மன்றத்தை அமைத்து தமிழ் மக்களுக்கு நற்பணியாற்றியவர்.

இந்திய அரசுப்படைகளும் அதிகாரிகளும் தமிழீழத்தில் மேற்கொண்ட தமிழினவிரோதப் போக்கை எதிர்த்து குரல் கொடுத்த சிவானந்தசுந்தரம் அவர்கள் இந்தியப்படையைத் திருப்பி அழையுங்கள் என்று இந்திய அதிகாரிகளின் முன்னர் வீரமுழக்கமிட்டவர். அதனாலேயே இந்திய அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகி அவர்கள் தூண்டுதலின் பேரால் 31. 10. 88 அன்று இனந்தெரியாதோரினால் படுகொலை செய்யப்பட்டு அவர் மடிந்தாலும், அவரின் விடுதலை முழக்கம் தமிழர் இதயங்களில் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

மறைந்த
திரு. ஆ. இராசரத்தினம்:
போராட்டப் பங்களிப்பு

யாழ் மாவட்டம் மட்டுவிலைச் சேர்ந்த மறைந்த ஆ. இராசரத்தினம் அவர்கள் தமிழீழம் விடுதலை பெற வேண்டும். அதற்காகப் போராட ஒரு இயக்கம் காண வேண்டும் என இலட்சியக் கனவு கண்டவர். அவரது கனவுகள் நனவாகும் காலத்தில் அதைப் பார்க்க அவர் இன்று எம்முடன் இல்லை.

1956 இல் சிங்கள அரசின் மொழித்திணிப்பினால் கொதித்தெழுந்த இராசரத்தினம் அவர்கள் தமிழ்த் தொழிலாளர்களை தொழிற் சங்கங்கள் புறக்கணித்து ஒதுக்கிய வேளையில் தமிழர்களைத் தனித் தொழிற் சங்கம் வைக்குமாறு சிங்கள அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உருவாக அயராது உழைத்து அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

தமிழ் மக்கள் உரிமைகளை அமைதிவழிப் போராட்டங்களின் மூலம் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து பெறமுடியாது என்பதை நன்குணர்ந்த அவரின் சிந்தனை ஆயுதப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது.

1973 இல் யாழ் பண்ணைப் பாலத்தை தகர்ப்பு முயற்சி தொடர்பாக பொலிஸார் தேடப்பட்டு தலைமறைவாகித் தமிழகம் சென்ற இராசரத்தினம் அவர்கள் எலிமான் என்ற பெயரில் பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை அனுப்பினார். மாணவர் பேரவை சிதைவடைந்த தமிழீழ விடுதலைக்கு புது இயக்கம் காணப் புறப்பட்ட பிரபாகரன் அவர்களை தமிழகத்தில் சந்தித்து அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

உக்க விடுதலைப் போராடிட வரலாறுகள், இராணுவ அமைப்புக்குத் தேவையான செய்திகளை ஆங்கில நூல்களிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்ததுடன், தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்துக்கான பெயர் உருவாவதற்கு உதவியாக இருந்தார். அந்த அவருக்கு அவர் விடுதலையை விரும்பிச் செயற்பட்டவர்.

இன்று விரும்பியமாக வளர்ந்துவிட்ட விடுதலை இயக்கத்தின் ஆரம்பகால அரசியலின் அரும்பகரும் இருந்தது. ஆனால் தோழுடனும், பட்டினியுடனும் ஒருபுறம் போராடிக்கொண்டே தமிழீழ விடுதலைக்காகப் பணியாற்றி உயிர்நீத்த இராசரத்தினம் அவர்கள் தமிழீழத்தின் நேதாஜி என தமிழ் மக்களால் போற்றப்படுகின்றார்.

மறைந்த
திரு. பொ. அருணாசலம்:
உயிரைமதிக்காத
தீரச்செயல்

வவுனியா மாவட்டம் பாலமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ. அருணாசலம் அவர்கள் பண்டைத் தமிழரின் வீரம் விழுந்து படவில்லை என்பதை வெளிப்படுத்தி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்.

கடந்த நவம்பரில் மாதங்களுக் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளினால் வெற்றி கொள்ளப்பட்ட வேளையில், ஆயுதத்துடன் தப்பியோடிய சிங்களச் சிப்பாய் ஒருவன் தான் வவுனியாவுக்குத்தப்பிச் செல்ல வழிகாட்டுமாறு தப்பாக்கியைக் காட்டி மிரட்டிய போது இந்த பொ. அருணாசலம் என்னும் 54 வயதுடைய வன்னிக்கிழவர் கத்திச் சிங்களச் சிப்பாயை சாதுரியமாக மடக்கிச் சண்டையிட்டார்.

ஆயுதத்தை இழந்த சிங்களச் சிப்பாய் கைறிகுண்டை எடுத்த போதும் அஞ்சாத அருணாசலம் அவர்கள் அவனோடு போராடிய போது கைக்குண்டு வெடித்து அந்தச் சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டான். விழுப்புண்ணேற்ற அருணாசலம் அவர்கள் யாழ் மருத்துவமனையில் கிடந்தவாறு நிலையில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவரின் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

திரு. கலைஞானி:
அரும்பொருள்
தொல்பொருள்
பாதுகாப்பு

யாழ் மாவட்டம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞானி அவர்கள் தனித்து நின்று தமிழீழத்தின் அரும்பொருட் காட்சியமாகக் கொண்ட பொ. அருணாசலம் அவர்களின் பண்டைத் தமிழரின் வீரம் விழுந்து படவில்லை என்பதை வெளிப்படுத்தி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்.

கலைஞானி அவர்கள் தமிழீழத்தில் பல பகுதிகளிலுமிருந்து சேகரித்த பண்டைய நாணயங்கள், கலைப்பொருள்கள், தொல்பொருள்கள், பழைய ஏடுகள், கையெழுத்துப்படிகள் (பிரதிகள்) என்பவற்றையெல்லாம் தனது ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப்பாதுகாத்து வருகிறார்.

அவர் தேடிவைத்திருக்கும் அருங்கலைப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பல இலட்சம் ரூபாவுக்கு விலை பேசிய பொழுது கோடி கொடுத்தாலும் ஒவ்வாது என்று ஆடித்துகூறியவர்.

சொந்த இருப்பிட வசதியோ, ஆன்றி நிலையான வருமானம் வரும் வகையில் தொழிலையோ இல்லாத நிலையிலும் அரசு வரும் விலக்கும் வகையில் தொல்லைகளைப் பொருள்களைச் சேகரித்துப் பேணி வருகிறார் என்றால் தமிழீழத்தின் பண்டைய அரிய கலைப் பொருள்கள் தமிழீழத்தை விட்டு வெளியேசெல்லக் கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாடே காரணியாகும்.

திரு. நடராசா;
போராட்டப் பங்களிப்பு

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காவிக்குட்டி நடராசா என்ற நடேசன்னார் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தன் உறுதியான பங்களிப்பின் மூலம் மக்கள் மனதில் நிலையாக நிற்பவர்.

விடுதலைப்புலிகளுக்கு அவர் படைத்த பாடல்களில் பெரும்பாலானவை தமிழுரிமை நெருப்புக்களாகவே இருந்தன. 1965இல் தமிழன்னவு என்னும் காவியத்தின் மூலம் இன்றைய போராட்ட நிலையை, பேராயிடை முறையை அன்றே அவர் கனவு கண்டு படம் பிடித்துக் காட்டுகிறார்.

எமது இயக்கம் உருவாவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னர்.

மறவர் பகடைதான்
- தமிழ்ப் பகடை
குலமானமொன்றுதான்
- ஆடுப்பகடை
வெறிகொள் தமிழர்
- புலிப்பகடை
அவர் வெல்வார் என்பது
- வெலிப்பகடை

என்று பாடி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் தீர்க்க தரிசனத்தோடு அன்றே கவிதையாக உரியவர். தமிழ்த் தேசிய விடுதலை உணர்வுகளையே அவர் பாடல்கள் முதன்மைப்படுத்திய தரமிகச் சிறந்த இலக்கியவாதியாக இருந்தும் அவர் 'இலக்கிய உலகினால்' ஒதுக்கப்பட்டார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை இலங்கைக்கு வெளியே (சென்னையில்) 1963இல் முதன்முதல் உண்ணாவிரதப் போராட்டம் மூலம் எடுத்துச் சென்றவர். சிங்கள அரசின் ஆடிமைமுறையான குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்மறுத்து தான் வகித்து வந்த முதல்வர் அவர். தமிழுரிமைப் போரில் வடமாகாணத்துக்கு மேலாக வெளிவிட்ட திரு. சுந்தர் புத்தகவெளியீட்டுத் துறையிலும் காலம் பதித்தவர். தூரிகை கொண்டு சமூக முரண்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டி மனப்பக்குவத்தை ஏற்படுத்தும் பாடுபட்டவர். தமிழ்த்தேசிய இன உணர்வின் வந்து நிலைகளில் ஒன்றாக விளங்கி வரும் திரு. சுந்தர் அவர்கள் சிறிலங்கா அரசு வழங்கிய சாகித்திய மண்டலப் பரிசை நிராகரித்ததன் மூலமாகவும் தமது மானவுணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

பத்திரிகை வெளியீட்டுத் துறையில் குறிப்பிடப்பட வேண்டியவராக திரு. சுந்தர் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் இன்றைய நிலையிலும் தொடர்ந்து பத்திரிகை வெளியீட்டுக்காக உழைத்து வருபவராவார்.

திரு. திருநாவுக்கரசு,
கலை (நாடகம்)

யாழ் மாவட்டத்திலுள்ள நாவன்மர்கட்டுப் பகுதியில் பிறந்தவர்தான் எஸ்-ரி. அரசன் என்னும் அறியப்பட்டவருமான திரு. திருநாவுக்கரசு அவர்கள் தமிழீழத்தின் நாடகத்துறை வரலாற்றில் குறிக்கப்பட வேண்டியவர் ஆவார். கலைமாக பரணியைப் பின்பற்றிய நாடகங்களில் தேர்ச்சி மிக்கவராக அரச நாடகம் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் பயிற்சி மிக்கவர். நாடகப்பிரதி தொடக்கம் ஒப்பனை வரையில் அனைத்தையும் நுணுக்கமாக நுணுகி ஆராய்ந்து மேடையேற்றும் அரக அவர்களின் முதலாவது நாடகம் காளக்கவியாகும். கலைவாணர் நாடக மன்றத்தின் இயக்குநராக இருக்கும் அரக அவர்கள் தாம் கற்பனையில் வடித்த ஒவ்வொரு பாத்திரத்தையும் தாமேஉருவாக்கி மேடையில் தோன்றும் ஒவ்வொரு பாத்திரத்திலும் தமதுமுத்திரையைப் பதிப்பவராவார். புராண, வரலாற்று நாடகங்களை மேடையேற்றுவதில் அனுபவம் மிக்கவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகால ஈடுபாடும், பயிற்சியும் கொண்டவர். 'ஆத்தவிளக்கு' என்னும் நிரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டதன் ஊடாக நிரைப்படத்துறையிலும் அறிமுகமானவர்.

இருவயதில் இந்தியாவில் சிறந்ததொரு பயிற்சி பெற்றவரான அரக அவர்கள் சிறந்த புகைப்படக் கலைஞரும் ஆவார். தமிழுணர்வு கொண்டவரென்பதுடன் 1961 இல் இடம்பெற்ற அறவழிப் போராட்டத்தில் சுடப்பட்டு வீரத்தழும்பு பெற்றவர் ஆவார்.

விடுதலைப் போராட்டம் வீறு வரை அரக அவர்கள் நாடகத்துறையில் இன்னும் தன் பங்களிப்பை நல்கி வருபவரே ஆவார்.

நடமாட்டம்

கடந்த ஐந்து தினங்களாக வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பொலிகண்டி ஆகிய கடற் பிரதேசங்களில் கைப்பட்டு வந்த தரித்த நிற்பதும் ஷெல் அடிப்பதும் வழக்கமாகிவிட்டது. 21

உபகரணங்கள் பறிமுதல்

கொழும்பிலுள்ள பல ஹோட்டல்களிலும், விடுதிகளிலுமிருந்து களினோர் குதாட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் பெருந்தொகையான மேசைகளும், உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

களினோர் குதாட்டத்திற்குத் தடைவிதிக்கப்பட்டதை அடுத்து அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி இந்த நேற்றுக் மேற்கொள்ளப்பட்டது.

60 மில்லியன் டாலர் நஷ்டஈடு!

அமெ. நிறுவனத்துக்கு செலுத்த இலங்கைக்கு பணிப்பு

அமெரிக்க நிறுவனமொன்றுக்கு 60 மிலியன் டாலர்களை நஷ்டஈடாக வழங்குமாறு இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றம் பணித்துள்ளது.

குறித்த அமெரிக்க நிறுவனம் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் ஒப்பந்தம் பெற்று வேலை செய்ததாகவும், ஆனால் மகாவலி அபிவிருத்தி நிறுவனம் கொழும்பு நீதிமன்றத்தின் தடை உத்தரவைப் பெற்று இந்நிறுவனத்துக்கான கொடுப்பனவை இடைநிறுத்தி வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே பிரஸ்தாப அமெரிக்கநிறுவனம் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசிடம் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தது. (33,70)

50 இலட்சம் ரூபா பொருள்கள் வவுனியா தடைமுகாமில் பறிமுதல்

வடக்கே செல்லுகை தடைசெய்யப்பட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வவுனியா தடை முகாமில் சோதனையின் போது கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

லொறிகள் மூலம் இவை யாழ்ப்பாணம்எடுத்துச்செல்ல முயன்ற வேளை பொலிஸ் இராணுவ சோதனையின் போது அகப்பட்டன.

பத்திரிகைத்தாள்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், சத்திரசிகிச்சை, வீடியோ, உட்பட்டும் பல வடக்கே எடுத்துச் செல்லத்தடை செய்யப்பட்ட பொருள்களே இதில் அடங்கியிருந்தன. (11)

வன்னிக்கு நூல்கள்

வவுனியா நூலகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. (11)

ஆறு மில்லியன் மட்டுமே அகதிகளுக்கு அரச உதவி

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களை பராமரிக்கவென யாழ் செயலகத்திற்கு 6 மிலியன்ரூபாபணம் வழங்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த அகதிகட்கு குடிநீர், குடிநீர், மலசலகூட வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க இப்பணம் பயன்படுத்தப்படவுள்ளதாக செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விவசாய தொழில்நுட்பப் போதனைக்கு 'கமநலம்' பயன்படுத்த பணிப்பு

விவசாய, தொழில் நுட்பப் பாடங்கள் போதிக்கப்படும் பாடசாலைகளில் கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்தால் காணியுடன் கொடுக்கப்படும் 'கமநலம்' விவசாய சஞ்சிகைகளை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர்ப்பிரதியாக பெறுமிடத்து ரூபா ஐந்து செலுத்தப்படவேண்டும். ஆனால் மொத்தமாக அறிக்கைப்பிரதிகள் பெறுமிடத்து 5.50 சதமே செலவாகும் எனவும் இதனை மேற்கதிய ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து பெறுமாறும் வடமேற்கு மாகாண கல்வி அமைச்சு பணித்துள்ளது.

அத்துடன் இதனை பயன்படுத்துதல் மூலம் பெறப்படும் பயன்பாடுபற்றி ஆறிக்கை தயாரித்து அனுப்புமாறும் சகல சேட்டக்கல்வி அதிகாரிகளையும் வடமேற்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது. (78)

மீண்டும் நியமனம்

வவுனியாமாவட்டத்தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். நடராசா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு சாவகச்சேரிப் பகுதி மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்தவர்.

தற்போது வவுனியா மாவட்ட பதில் வைத்திய அதிகாரியாகவும் இவர் பணி புரிகிறார். (11)

மாணவர்கள் பலி!

குற்றவேல்வத்தில் இரண்டு மூன்று பாடசாலை மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

பேருவளைப் பகுதியில் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட மூன்று மாணவர்களே மரணமானவர்கள்.

முக்கிய பிரமுகர் பொலிஸ் காவலிலிருந்து தப்பினார்!

மீண்டும் ஜே.வி.பி. புத்துயிர்!!

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பிலிருந்த பிரபல ஜே. வி. பி. நபர் ஒருவர் தப்பி ஓடிவிட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைமறைவாக இருக்கும் இந்த நபர் மீண்டும் ஜே.வி. பி. யைப் புனரமைக்கவும், அதன் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

இவர் தப்பியோடியதையடுத்து ஜே. வி. பி. யினருடைய நடவடிக்கைகள் தெற்கில் புத்துயிர் பெற்றுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (33,70)

அர்ஜுனா 'கிளீன்வோல்ட்'! கருத்துவேறுபாடே காரணமாம்

இந்தியாவில் சிறிசாந்திற்கு ஏற்பட்டகதி இலங்கை அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்கவிற்கும் ஏற்படுகின்றது.

பூனா, ஆஸிட் காரணங்களில் இங்கிலாந்து செல்ல உள்ள இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் 26 பேரின் பட்டியலில் அர்ஜுனா ரணதுங்கவின் பெயர் இடம் பெறவில்லை.

அண்மையில் இலங்கைகிரிக்கட் அணி 'டெஸ்ட்' போட்டிகளில் கலந்து கொள்ளநியூசிலாந்திற்குச் சென்றிருந்தபோது இலங்கை அணி முகாமைக்கும், உதவிமுகாமைக்கும் இடையில் ஏற்பட்டபிணக்கில் அர்ஜுனா உதவி முகாமையாளர் பக்கச்சார்பாகநடந்து கொண்டமையினால் மேலேஇலங்கைகிரிக்கட் சபை அவரை அணித் தலைவர் பதவியில் இருந்தும், அணியில் இருந்தும் முற்றாக விலகியுள்ளதாகக் கிரிக்கெட் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

அர்ஜுனாவுடன் டிலானிக்க ரணதுங்க, அரோக்க டி சில்வா, நோமி லமோனி, ஆகிய முன்னணி வீரர்களும் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முற்றவெளியில் முத்தமிழ் விழா! ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

யாழ் முற்றவெளி முத்தமிழ் விழாவைக் காணத் தயாராகி வருகிறது.

அங்கு பிரமாண்டமான மேடையொன்று அமைக்கப்பட்டுவருகின்றது.

1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றதன் பின்னர் முற்றவெளி மற்றொரு தமிழ்விழாவைக் காணத் தயாராகிறது.

பல வருட இடைவெளிக்கு பின் முன்னர் ஒருவருடத்துக்கு முன்னர் யாழ் முற்றவெளி விழாவே நிகழ்ச்சி நடந்தது. தற்போது அதே இடத்தில் முத்தமிழ்விழா நிகழ்ச்சிகளுக்கான மேடை போடப்படவுள்ளது (74)

வருடாந்தக் கணக்கெடுப்பினை 30 ஆம் திகதிக்குள் முடிக்கப்பணிப்பு

யாழ்மாவட்டத்திலுள்ள மாவிதிதியாளர்களுக்குரிய 1990/91 க்கான கணக்கீடு வேலைகளை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் முடித்து அறிக்கைகளை தமக்கு சமர்ப்பிக்குமாறு யாழ் மாவிதிதியாளர்களை கணக்காளர் பணித்துள்ளார்.

ஏற்கனவே 1990/91 க்குரிய பொருட்கொள்வனவு வேலைகளை செம்மையாக்கி தமது பாடசாலைகளுக்குரிய கணக்கீடு வேலைகளை நடத்தலாம் என அறிவித்துள்ள மாவிதிதியாளர்கள் விரைவாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (78)

கறுப்புப்பூனைகளின் காவலில் ஸோனியாவின் குடும்பத்தினர்

ராஜீவ் காந்தி குடும்பத்துக்கு கறுப்புப் பூனைகள் பாதுகாப்பு.

திருமதி சோனியா ராஜீவ், பிரியங்கா ஆகியோருக்கே கறுப்புப்பூனைகள் காவல் புரிகின்றனர்.

இவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம். என்பதால் இந்த உயர் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. என அறிவிக்கப்படுகிறது. (11)

பச்சை குத்திக்கொள்வோர் ஒல்லாந்தில் ஒன்றுகூடினர்

பச்சைகுத்திக் கொள்வோர் மகாநாடு ஒன்று சமீபத்தில் ஒல்லாந்தில் நடைபெற்றது.

இதில் புதுவகை கை ஆயுதங்களுடன் ஏராளமானோர் பங்கேற்றனர்.

பச்சைகுத்திக் கொள்வதில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய முறைகள், உத்திகள், டிசைன்கள் பற்றி இம் மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. (48)

இந்திய சீனி இலங்கை வருகிறது

இலங்கைஇந்தியாவிலிருந்து சீனியை இறக்குமதி செய்வதாகும்.

இது தொடர்பாக பேச்சு நடாத்தவென இந்திய சீனி உற்பத்தியாளர் சங்கச் செயலாளர் ஜி. வெங்கடேஸ்வர் தலைமையிலான குழு கொழும்பு வந்துள்ளது.

மிகக் குறைந்த விலையில் இலங்கைக்கு சீனியை வழங்க இந்திய உற்பத்தியாளர்கள் இணங்கியுள்ளனர்.

குவைத்தில் பணிப் பெண்கள் மீது கடுமையான சித்திரவதை

குவைத்தில் பணிப் பெண்களாக வேலை செய்யும் இலங்கை, இந்திய பெண்கள் கொடூரமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் அறையில் பூட்டி வைக்கப்பட்டு வயிறாலும், தும்புத்தடியாலும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

அரச குடும்பத்தில் பணிபுரிந்திய லக்ஷ்மி என்ற இந்தியப் பெண் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார். அவருடன் வேலை செய்த இலங்கைப் பணிப் பெண் தப்பி வந்து இலங்கை உயர் கிதானிகராலயத்துக்கு தகவல் கொடுத்தபின்பு இவ்விடயம் தெரிய வந்தது. (70)

வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்த காங்கேசன் ஊழியருக்குப் பணிப்பு

வங்கிகளில் கடன்களைப் பெற்ற காங்கேசன், சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு கடன்தொகையும் பணத்தையும் அதற்கான மேலதிகப்பற்று வட்டியினையும் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட வங்கி கடிதங்களை அனுப்பியுள்ளது.

இவ்வங்கிக் கடன்களுக்கு நிலுவை பணம் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து கடந்த 10 மாதங்களுக்கு மேலாக தொழிற்சாலையினால் கழிக்கப்பட்டும் இத்தொகை உரிய வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லையாம். (ப. 10)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 03 — 1934

மறைவு: 10 — 05 — 1991

அமரர் சின்னையா வல்லியுரம் நடராசா

(இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்)

ஆண்டு பிறப்பிடமாய் எங்கள் குடும்ப ஒளி விளக்காய் பாரதியின் உரைவிடமாய் செயற்திறன் மிக்கவராய் திகழ்ந்த எம் ஆருயிர் தெய்வமேயானாலும் உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது.

சரிமினா வாசா,
கெல்லெடி லேன்,
திருநெல்வேலி மேற்கு.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.
06040

★ கடலிவலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் யாழ் அரச அதிபருக்கு மகஜர்

கடல் வலையச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப்பகுதி மீனவர்களின் நிலைமைகள் குறித்து யாழ் அரசாங்க அதிபருக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடலிவலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மீனவக் குடும்பங்களுக்கு ஒன்னர் வழங்கப்பட்ட மீனவ முத்திரை, மீனவ அடையாள அட்டை என்பன வற்றை மீண்டும் வழங்குமாறும் அரசாங்க அதிபரிடம் இவர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான மகஜரை வடமராட்சி ஒருங்கிணைப்பு கடற்றொழிலாளர் கிராமிய சமூக அபிவிருத்தி அமைப்பு, கூட்டுறவு மீனவர் சங்கம் என்பன அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்திருந்தன.

தொண்டமானாறு முதல் கட்டைக்காடு வரைக்கும் உள்ள கடற்பிரதேசத்தில் தாம் கடற்றொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் இதனால் தமது ஜீவனோபாயம் பட்டினியால் வாடுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர். (47)

அஞ்சல் அஞ்சலியானது!

"இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனின் உலகை சீக்கல இந்திய வானொலி நிலையங்களும் அஞ்சலி செய்யும்."

இப்படி நேற்று மாலை செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. எனினும் பின்னர் அறிவிப்பாளர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அஞ்சலியை அஞ்சல் என்று திருத்திக் கொண்டார்.

விடுதலைப்புலிகள் மாவட்ட செயலகம்

பொருள் உதவி கோருபவர்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு கோரிக்கை

போராளிகள் வளர்ச்சிப் போக்கில் பொது மக்களாகிய உங்களிடமிருந்து பொருள் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைகள் எமக்கு ஏற்படுகின்றன.

அதனால் பல சந்தர்ப்பங்களில் எமது போராளிகள் உங்களிடம் பொருள் உதவி கோரி வந்திருக்கிறார்கள், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருள்களைப் பெற்றுச் செல்லும் உள்ளூர்கள் அச் சந்தர்ப்பங்கள் அவசரமானவையாக, தற்காலிகமானவையாக அல்லது நிரந்தரமானவையாக இருக்கின்றன. பெறப்படுகின்ற பொருள்கள் விலைப்பெறுமதியில் கூடியவையாகவும், குறைந்தவையாகவும் இருக்கின்றன.

ஆனால் இவ்வாறு உங்களிடம் பொருள் உதவி கோரி வருகின்றவர்கள் உண்மையிலேயே எமது இயக்கப் போராளிகள் தானா என்பதை உறுதி செய்ய உங்களாலுமியாமல் போகின்றது.

சில சமயங்களில் தங்களைப் போராளிகள் என்று கூறிக் கொண்டு வந்த சில சமூக விரோதிகள் பொதுமக்களிடம் பொருள்களை வேண்டிச் சென்றுள்ளார்கள் அவ்வாறான சமூக விரோதச் செயல்களை நாம் கண்டு பிடித்திருக்கிறோம். இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

எனவே உங்களிடம் உதவி கோரி வருகின்றவர்கள் உண்மையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் தானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கின்றது.

இதனால் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவ்வாறானவர்கள் இயக்கத்திக் தங்களுக்கு இயக்க அடையாளமிட்ட "இயக்கத் தகடுகளை" தங்களுடன் வைத்திருக்கின்றார்கள்.

எனவே இவர்கள் உங்களிடம் பொருள் உதவி கோரி வரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் அவர்களிடம் பொருள்களைக் கொடுக்கும் போது அப்போராளிக்குரிய இலக்கத் தகட்டினை பெற்று அவ் இலக்கத்தினை குறித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நடைமுறையின் மூலம் மக்களை ஏமாற்றி பொருள்களைப் பெற்றுக் கொள்ள முயலும் சமூகவிரோதிகளைக் கட்டுப்படுத்துவோம். மேலும் இப்படியான வர்கள் இளம் காணும் பட்சத்தில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம். என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மணலாறு...

தொடர்ந்த காவலரணுக்குள் நுழைந்த புலிகள் அணி அங்கிருந்த படையினரின் ரி 81 ஷெல்கள்- 9, இதன் ரவைக் கூடுகள்- 4, விங்- 480, கைமார் வெடிக்கும் வைக்க கருவிகள்-2 என்பவற்றை மீட்டனர்.

தொடர்ந்து அங்காவலரண் புலிகளால் முற்றாக தகர்க்கப்பட்டது.

காரைநகரில்...

அன்னலட்சுமி (60) என்பவர் காரை கிளை கோயிலில் தங்கி இருந்த போது ஷெல் விழுந்ததால் கையில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார் இவரிடமிருந்து ஒருவரும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அங்கு தங்கியுள்ள வயோதிபர்கள் நோயாளிகள் ஆதியோரை இன்று அழைத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் சொந்தக் கைகெழுத்திக் எழுதப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. நேற்று செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் காரைநகர் பகுதி மக்களை அதிகாரக் காணமுடிந்தது இரண்டொரு தினங்களில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் காரைநகருக்கு செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

திங்கட்கிழமை அவசர கூட்டம்

தனியார் கல்வி நிலைய ஒன்றியச் செயற்பாடு பற்றி கலந்துரையாடுவதற்கும். சில முக்கிய முடிவினை எடுப்பதற்கும் கோட்டாரியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிர்வாக உறுப்பினர்கள் சகலும் நாளை 10ம் திகதி திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு நல்லூர் மகிழையடிரசி வித்தியாலய மண்டபத்திக் நடைபெறும் என்றும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கல்வி நிர்வாகப் பகுதியினர் வேண்டியுள்ளனர்.

புல்லுமலையில்...

இரண்டு பெண்களையும் ஆண் ஒருவரையும் கைது செய்தனர்.

இவர்கள் பின்னர் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள்...

பெற்றுக்கொண்டிருப்பதாக நாளைமட்டுமே இன்று வரக் கூடியதாக இருந்தது.

இவ் இராணுவத்தினரை கொன்ற பின் சமரோம் என இப்போராட்டத்திக் இணைந்த எமக்கு இப்போராட்டம் பலவந்தமாக எறிந்துள்ளது.

இந்த விழாவையும் மக்களையும் மகிழ்ச்சி போது எமது போராட்டத்திற்கு ஓர் உந்துசக்தி ஏற்படுகிறது. இக் குள்ள மக்கள் குறித்து நாம் மன்னார் மக்களுக்கு குறிப்பிடுவோம் யாழ் மக்கள் எதற்கெடுத்தாலும் முன்னுக்கு வருவார்கள் என நாம் அவர்களுக்கு கறுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

கோண்டாவில், சித்தங்கேணியில் விசேட கிளைகள் திறக்கின்றது

கோண்டாவில் கிழக்கு, சித்தங்கேணி ஆகிய இடங்களில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் விசேட கிளைக் கடைகளை நாளை திங்கட்கிழமை திறக்கவுள்ளது

வலி - வடக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த பாவனையாளர்களுக்கு உலர் உணவு அட்டைகளுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காகவே இக்கிளைகள் திறக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து உடுவில், சேப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கிளைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

வலி - வடக்குப் பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்கள் இக்கிளைகளிலேயே இனிமேல் உலர் உணவுப் பொருள்களை பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வரப் செலவகம் இதற்கான அனுமதியினை வழங்கி உள்ளதும் குறிப்பிடத்தக்கது. ப-1

மூன்று முறிப்பு தடை முகாமில் 170 லொறிகள் காத்திருக்கின்றன!

வடக்கே உணவு பொருள்களை எடுத்து கொண்டு சென்ற லொறி நிலையில் வவுனியாவிலும் அனுராதபுரத்திலும் பல லொறிகள் காத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ அனுமதி கிடைத்தவுடன் இந்த லொறிகள் புறப்படும் தினமும் மேற்படி

கஜபாபுர...

படையினர் காவலமைத்த தாக கோழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாராம்.

கொழும்பில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமைச்சர் ரணில் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணவேண்டும் எனவும் கூறினாராம்.

நெல்...

ஒரு கிலோ நெல் 6. 50 சதத்திற்கு கொள்வனவு செய்யப்படுகிறது. பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வாடகை விவசாயிகள் நெற்சந்தைப் படுத்தும் சபைக்கு நெல்லை விற்பனை செய்யலாம் என பிரதேசிய முகாமையாளர் தெரிவித்தார். 58

திருகுகுதியிலிருந்தும் 20 லொறிகள் தாண்டிக்குளம் வடாக்க அனுப்பி வைக்கப்படுகின்றன.

அத்தியாவசிய உணவுவகைகளும், சவர்க்காரமும், தேங்காய் எண்ணையுமே அதிகமான லொறிகளில் உள்ளது.

மூன்றுமுறிப்பு வவுனியா தடைமுகாமில் மட்டும் கடந்த வாரம் 178 லொறிகள் தரவிடி நிலையில் நின்றது குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலிருந்து இன்னும் உணவு வகைகளுடன் லொறிகள் வவுனியாவுக்கு வந்த வண்ணம் உள்ளது.

கடந்த சில தினங்களில் மேலும் பல லொறிகள் வந்து சேருமென அறியமுடிகின்றது. (11)

வீட்டுப்...

பறித்தும் முயலாகவே இந்த வடிக்கை என கோழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எழுச்சிப்பாடலை...

சுவை அரங்கிற்கு திரண்டு வந்தனர். இதனால் இட நெருக்கடியும் ஏற்பட்டது.

கானிப்பாயில் மூன்றாம் நாள் முத்தமிழ் விழாவில் இறுதி நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன. (74, 79)

நான்காம் நாள் நிகழ்ச்சி

இடம்: சாவகச்சேரி கிழக்கு கோவில் அருகாமையில் அமைந்துள்ள 'மாவீரர் கலை அரங்கம்'

நாள்: 09-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 5. 30 மணி.

மங்கல இசை:- நாதஸ்வரம்
திரு. எஸ். ஆர். கே. இரத்தினகுமார்
திரு. எஸ். ஆர். கே. வரகீஸ்வரன்
தவில்
திரு. எஸ். முருகானந்தம்
திரு. எஸ். ரமேஷ்

விடுதலைப்புலிகளின் சிறப்புரை

சிறப்புரை: பேராசிரியர் கி. க சிற்றம்பலம் அவர்கள் (வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

இளைஞர் கவியரங்கம்

பொருள்: 'போரும் வழி வெகு தூரம் இல்லை'
தலைமை: கவிஞர். நக்க, கிரிதம்பரம்
பங்கேற்போர்: தேவசீலன், மணவாளு பாஸ்கரன், செந்தமிழ்க்கோன், இலக்கியா, கருணாகரன், நாமகள், வினோதினி

'வாத்ய ப்ருந்தா'

இசைக்கச்சேரி

திரு. எஸ். பாலகிருஷ்ணம் — பாட்டு
திரு. வி. கே. குமாரசாமி — வயலின்
திரு. எம். தெம்பரநாதன் — மிருதங்கம்
திரு. ஏ. செல்வரத்தினம் — கடம்

மீசாலை, கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் 'தீர்வு' நாடகம் நடைபெறும்

இவர்களைவிரைவில் — நாடகத்தை விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் 'போர்க்காலப் பாடல்கள்' மெல்லிசை நிகழ்வு

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்லியன்சாடி டச்ச வீதி 'லக்ஷ்மி' பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 09. 06. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.